**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:03.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (வேளாண்மைப் பிரிவு) இளமறிவியல் மாணவர் சேர்க்கைகான இரண்டாம் கட்ட கலந்தாய்வு**

இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பிரிவிற்கும், ஒரே இணையதள விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 14 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 3 இளமறிவியல் வேளாண்பாடப்பிரிவுகளுக்கும் இந்த இணைய விண்ணப்பத்தின் வழியாக மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இக்கல்வியாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2516 இடங்களும் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகளில் அரசு இடஒதுக்கீடான 3051 இடங்களும் நிரப்பப்பட உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பிரிவுகளுக்கு 340 இடங்களும் நிரப்பப்பட உள்ளன.

இதுவரை நடைபெற்ற இணையவழி கலந்தாய்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இணையதள விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான தேதி | 06.05.2026 முதல் 17.06.2026 வரை |
| தரவரிசைப் பட்டியல் வெளியீடு | 03.07.2026 |
| **பட்டப்படிப்பிற்கான இணையவழி கலந்தாய்வு** | |
| பொதுப்பிரிவினர் மற்றும் 7.5% அரசாங்க இட ஒதுக்கீடு | 09.07.2026 முதல் 15.07.2026 வரை |

| | |
|---|---|
| முன்னாள் இராணுவ வீரர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு | 17.07.2026 |
| **முதற்கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு** | |
| 7.5% அரசாங்க இட ஒதுக்கீடு | 20.07.2026 |
| பொதுப்பிரிவினருக்கான இடஒதுக்கீடு | 22.07.2026 முதல் 27.07.2026 வரை |

**இரண்டாம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு**

| | |
|---|---|
| 7.5% அரசாங்க இட ஒதுக்கீடு | 01.08.2026 |
| பொதுப்பிரிவினருக்கான இடஒதுக்கீடு | 12.08.2026 முதல் 13.08.2026 வரை |

**மூன்றாம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு**

| | |
|---|---|
| 7.5% அரசாங்க இட ஒதுக்கீடு | 11.08.2026 |
| பொதுப்பிரிவினருக்கான இடஒதுக்கீடு | 19.08.2026 முதல் 20.08.2026 வரை |

**நான்காம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு**

| | |
|---|---|
| 7.5% அரசாங்க இட ஒதுக்கீடு | 21.08.2026 |
| பொதுப்பிரிவினருக்கான இடஒதுக்கீடு | 01.09.2026 மற்றும் 03.09.2026 வரை |

இக்கலந்தாய்வு மூலம் நிர்ணயிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை 5,907 ஆகும். இதுவரை 4,827 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. எனவே, தற்போது 1,080 இடங்கள் காலியாக உள்ளன.

இக்காலியிடங்களை நிரப்புவதற்காக இரண்டாம் கட்ட கலந்தாய்வு 09.09.2026 அன்றும், துணைத்தேர்வாளர்களுக்கான கலந்தாய்வு 10.09.2026 அன்றும் நடைபெற உள்ளது.

மேலும், மேற்கண்ட கலந்தாய்வுகளுக்குப் பின்னரும் காலியிடங்கள் இருப்பின், கல்லூரிகள் தொடங்கிய பின்னர் 23.09.2026 அன்று நேரிடையான மாணவர் சேர்க்கை மூலம் அந்தக் காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

***மக்கள் தொடர்பு அலுவலர்***